2009 பிப்ரவரி 20]

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் எஸ்.எஸ். குளம் ஒன்றியத்தில் சத்துணவுக் கூடங்கள் எல்லாப் பள்ளிகளிலும் பழுதடைந்துள்ளன. அவற்றைச் சீரமைப்பதற்கு எம்.எல்.ஏ., நிதியிலிருந்து நிதி ஒதுக்க முடியாது. ஆகவே, பராமரிப்பு செய்வதற்கு நிதி ஒதுக்கித் தருவதற்குத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சின்னசாமி, நீங்கள் 2006-ல் கேள்வி கொடுத்ததாக அவைக்குத் தவறான செய்தியைக் கொடுத்திருக்கிறீர்கள். 2008-ல்தான் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே தரப்படுகிற கேள்விகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலே அவை தொடர்ந்து நீடிக்காது. Cancel ஆகிவிடும். மறுபடியும் நீங்கள் கொடுத்த கேள்விதான் வந்திருக்கிறதே தவிர, முதலில் கொடுத்த கேள்வி நடைமுறையில் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சின்னசாமி, நீங்கள் 13-5-2008-ல் கேள்வி கொடுத்திருக்கிறீர்கள். 13-1-2009-ல் பதில் வந்திருக்கிறது.

வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

39—

உண்டு உறைவிடப் பள்ளி

***11623—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, தொட்டமஞ்சு, தொலுபேட்டா, பெட்டமுகுலாளம், மஞ்சுகாண்டப்பள்ளி ஆகிய கிராமங்களில் உள்ள பழங்குடி மாணவ, மாணவிகளுக்கு உண்டு உறைவிடப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2009 பிப்ரவரி 20

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தளி தொகுதிக்குட்பட்ட தொட்டமஞ்சு, தொலுபேட்டா, பெட்டமுகுலாளம், மஞ்சுகாண்டப்பள்ளி ஆகிய இடங்களை ஒன்றிணைத்து பெட்டமுகுலாளம் பகுதியில் ஓர் உண்டு உறைவிடப் பள்ளி துவக்குவதற்குப் பரிசீலனை செய்யப்படும். (குறுக்கீடு)

முற்பகல் 10-00

திரு. ஆர். சின்னசாமி: என்னுடைய கேள்விக்கு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லையே?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் முதலிலேயே பதில் சொல்லி, அதற்குப் பிறகுதான் நீங்கள் எழுந்து கேட்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடி மக்கள் அதிகம் வசிக்கின்ற என்னுடைய தளி தொகுதியில் தொட்டமஞ்சு, தொலுபேட்டா, பெட்டமுகுலாளம், மஞ்சுகாண்டப்பள்ளி ஆகிய பகுதிகளைச் சுற்றியுள்ள மலைக் கிராமங்களில் வாழுகின்ற பழங்குடியினர் வறுமையின் காரணமாகத் தங்களுடைய குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல், வேறு பணிகளுக்கு அனுப்புவதால், குழந்தைத் தொழிலாளர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பதோடு, அவர்களுடைய ஆரம்பக் கல்வியே கேள்விக்குறியாக உள்ளது. ஆகவே, பழங்குடி மாணவ, மாணவிகளின் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில், அவர்கள் தங்கிப் படிக்கும் வகையில், நான் ஏற்கெனவே குறிப்பிட்ட அனைத்து மலைக் கிராமங்களிலும் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்டமுகுலாளம் கிராமத்தைச் சுற்றி 4 முதல் 7 கிலோ மீட்டர் சுற்றளவில் சுமார் 15 மலைக் கிராமங்கள் உள்ளதாகவும், அந்தக் கிராமங்களில் வசிக்கும் குழந்தைகள் படிப்பதற்கு வசதியுள்ள

2009 பிப்ரவரி 20]

பள்ளி இல்லாத காரணத்தினால், பெட்டமுகுலாளம் கிராமத்தில் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியை ஆரம்பிக்கலாமென, மாவட்ட ஆதி திராவிடர் நல அலுவலர் அரசுக்குப் பரிந்துரைத்துள்ளார். அதன் அடிப்படையில், பெட்டமுகுலாளம் கிராமத்தில் அரசு உண்டு உறைவிடப் பள்ளி ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நன்றி. அதேபோல, ஏற்கெனவே பெட்டமுகுலாளம் கிராமத்திலே இயங்கி வருகின்ற உண்டு உறைவிடப் பள்ளியில் போதிய வகுப்பறைகளோ, தங்கும் விடுதியோ அல்லது கழிவறைகள்போன்ற எந்த அடிப்படை வசதிகளோ இல்லை. ஆகையால், அத்தகைய அடிப்படை வசதிகளை அந்த உண்டு உறைவிடப் பள்ளிக்கு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினா குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

40—

பால் கொள்முதல் நிலையம்

***1671—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—